உ

திருச்சிற்றம்பலம்

அருட்புகழ்

சென்னை மண்ணடிச் செல்வ விநாயகர் திருக்கோயில்

(மண்ணடிப் பிள்ளையார் கோயில்)

அருட்கவி சேதுராமன் அவர்கள்

திருவருள் உந்தப் பாடியவை

3-9-1962

1963

உ

ஆசிரியப்பா

"மண்ணடி தன்னில் மாவலி யமுந்த
மண்ணினை அளந்த மாலின் மருகனின்
அண்ணனை மண்ணடி அமரைங் கரனைப்
பண்ணொடு பாடிப் பரவுதும் யாமே."

இப்பாடல் ஸ்ரீ S. V. சுப்பிரமணியம் அவர்களால் மண்ணடிப் பிள்ளையார்மீது 1950 இல் பாடப்பெற்றது.

அப்பர் அச்சகம், சென்னை-1.

ௐ

அருட்புகழ்

[அருட்கவி சேதுராமனுர் திருவருள் உந்தப் பாடியது]

(3-9-'62)

விநாயக சதுர்த்தி தினம்

சென்னை மண்ணடிச் செல்வ விநாயகர் திருக்கோயில்

(மண்ணடிப் பிள்ளையார் கோயில்)

பிள்ளையார் வணக்கம்

நவரோஸ்] (1) இனிய வாக்கைப் பெற [ஆதி

தத்தன தாத்தத் தனதான

தக்கண மூர்த்திப் பெருமானுர்—
தற்றகீள் மேற்கச் சணிவார்தம்;
மக்களுல் வோர்க்குட் டலையானய்—
மட்டுநேர் வாக்கைத் தருவாயே;
பொக்கண நீற்றிற் பொலிகோலா—
பொற்றைநேர் கோட்டுக் கணநாதா!
முக்கண! கோட்டைச் செனையூடே—
முத்தியாள் பேட்டைப் பெருமாளே. (1)

(குறிப்புரை) *தக்கண மூர்த்தி - தட்சிண மூர்த்தி; தென் முகக் கடவுள். தற்ற - உடுத்துள்ள. கீள் - அரையாடை; லங்கோடு போல்வது. கச்சு - இடையணி. மக்கள் நால்வோர் - விநாயகர், முருகவேள், வீரபத்திரர், பைரவர். தலை - முதல்வன்; மூத்த விநாயகன். மட்டு - தேன். பொக்கு - குற்றம்; பொள்ளல். அண - அண்ணுத எனினுமாம். பொற்றை - சிறுமலை. கோடு - தந்தம். கோட்டைச் செ(ன்)னை-*Fort St. Greoge Town, Madras *முத்தி ஆள் பேட்டை - மோட்சராணி அரசு புரியும் பேட்டை முத்தியாலுப் பேட்டை என வழங்குவது.*

செஞ்சுருட்டி] (2) உய்வு பெற [ஆதி

தன்னன தன்னனத் தனதான
தய்ய தனுதனத் தனதான

என்னையும் உன்னடிக் கடியானு—
எய்தவை யாய்!கணத் தலேவோனே!
உன்னையும் உன்னிமற் றடிநாயேன்—
உய்தி பெறுதுகெட் டிடலாமோ!
அன்னையெம் அம்மையுத் தமிவாழ்வே—
அவ்வையை ஆள்சதுர்த் திகணேசா!
சென்னையில் மண்ணடித் தளிமேவும்—
செல்வ விநாயகப் பெருமாளே. (2)

(கு - ரை.) உன்னி - ஆழ்ந்து நினைத்து. மற்று - அசை. உய்தி - நல்வாழ்வு. சதுர்த்தி கணேசர் - சதுர்த்தி விரதத்திற் பிரியங்கொண்ட விநாயகர். மண்ணடித்தளி - (சென்னை-1-இல்) 'மண்ணடி' என வழங்குமிடத்துத் தம்புசெட்டித் தெருவிலுள்ள கோயில். 'செல்வ விநாயகர்' என்பது இக் கோயில் விநாயகரின் திருநாமம்.

புந்நாகவராளி] (3) சிக்கலற அருள்பெற [ஆதி

தத்த தனன தத்த தனன
தத்த தனன தனதான

அப்ப மவரை தொப்பை யடைய
அப்பி யமுது செயும்நாதா—
அச்சு முறிய அச்சிவ னரி
அப்புற நகர் தரவேசெய்;
செப்ப முடைய அப்ப! சுமுக!
செட்டி துணைவ! சிவயானய்—
சித்தி வலபை புத்தி கொழுந!
சிக்கல் அறவும் அருள்தாராய்;
தெப்பம் இனிது கச்சி இறைவர்
சிட்டர் செனையில் மகிழ்வாவி—
தெற்கில் உனதில் மிக்கு விரவு
சிற்ப வடிவ! சமரூரார்;

நிப்ப நிழலில் முக்கண் முதல்வ!
நித்தர் புதல்வ! திருநீருர்—
நெற்றி அழக! முக்தி நகர!
நிட்டை அடியர் பெருமானே. (3)

(கு - ரை.) அப்பி-கவ்வி; வாயில் திணித்து. சிவன் அரி-சிவனது தேர். அச்சுமுறிய-(முதலில்) தேரச்சு முறிந்துபட. அப்புறம் நகர்தர - பிறகு நகர்ந்து அசைய. சுமுகன் - விநாயகர் திருநாமம். செட்டி-முருகவேள். சிவயானுய் சிவக்களிறே! சித்தி வ(ல்)லபை, புத்தி என்ற மூவரும் விநாயகரது தேவிமார்கள். தெப்பம் - தெப்போற்சவம். கச்சி இறைவர் - கச்சாலேசுரர். வாவி - கச்சபேசர் திருக்கோயில் திருக்குளம். தெற்கில் உளது - அக்குளம் மண்ணடிப் பிள்ளையார் கோயிலுக்குத் தெற்கில் (அதாவது தென்மேற்கில்) உள்ளது. தெப்பம்......விரவு - கச்சாலேச்வரர் தெப்போத்ஸவத்தில் அதே தெப்பத்தில் ஒருநாள் மண்ணடி விநாயகரும் வீற்றிருந்து தெப்பவுலா வரும் வழக்கம் ஈண்டு நினைவுறுத்தப்பட்டது. சிற்ப வடிவ - கற்சிலையாயுள்ளவனே! சமரூர்-திருப்போரூர். நிப்ப நிழல் - நிம்பநிழல்; வேம்படி. திருப்போரூரில் வேம்படி விநாயகர் வீற்றிருக்கிறூர். முக்தி நகர-முத்தியாள் பேட்டையிலிருப்பவனே! நிட்டை - யோகநிஷ்டை.

பிலகரி] (4) ஆட்கொளப் பெற [ஆதி

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான

கணபதி யெனுவுன் நினைவுதவ ருது
கருதுமடி யார்கள் நினைவூடே—
கணமுமக லாது குணமொடவர் பேணு
கருமம்நிறை வேற அருள்காளாய்;
பணபதி குபேரன் அரிகமலன் மால்சொல்
பணிவிடை செயாமெய் வழிபாடு—
பயில்பத விநோத! குயில்மொழிய ரான
பனிருவர் மணாள! எனையாள்வாய்;
கணபதி யெனுமம் உளதொர்பதி கோவை
கயிலைமழ பாடி களர்காவை—
கடிநகர் ஐயாறு கொடுவைஅவி நாசி
கழுமலம் விராலி மலைதேவை;

குணபதி குமார வயலிதிரு நாரை
கொடுமுடி பிரானின் மலைகோணக்-
குவடுமயி லாடு துறைசமரி யோடு
கொழிசெனையில் மேவு பெருமாளே. (4)

(கு-ரை.) எனு-என்று. காளாய்-காளையே! பணபதி-தனபதியான குபேரன். கமலன் - பிரமா. மால் - இந்திரன். சொல் பணிவிடை செயா - சொல்லப்படுகின்ற பணிவிடைகளைச் செய்து. பனிருவர் - திருமால் மகளிர் பன்னிருவர்; இவர்களை விநாயகர் திருமணம் புரிந்துகொண்டார் என விநாயக புராணம் கூறும். கணபதி என் நாமம் உளதொர்பதி - கணபதியென்கின்ற பெயரையுடைய ஒரு தலம்; இது கோவைக்கருகிலுள்ளது. களர் - திருக்களர். காவை - திருவானைக்கா. கடிநகர் - திருவிழா மலிந்த நகரம். கொடுவை - கொடுமளூர் தேவை - இராமேசுரம். குணபதி - நற்குணங்களின் தலைவனுகிய முருகவேள். குமார வயலி- குமார வயலூர்; ஆதிவயலூரே குமார வயலூரெனவும் வழங்கப் பெறுகின்றது. திருநாரை - திருநாரையூர். கொடுமுடி - திருப் பாண்டிக் கொடுமுடி. பிரானின் மலை - பிரான்மலை; கொடுங் குன்றம். கோணக்குவடு - ஈழத்திலுள்ள கோணுசலம். மயிலாடு துறை - மாயூரம். சமரி - திருப்போரூர். கொழி செனை - அருள் கொழிக்கின்ற சென்னை.

முருகவேள் திருமுன்

பூர்வகல்யாணி] (5) நற்றுயிரங்கல் [ஆதி

தன்ன தன்னன தன்ன தன்னன
தன்ன தன்னன தன்ன தன்னன
தன்ன தன்னன தன்ன தன்னன தனதான

கன்னி தன்னிலை மன்னு பெண்மணி
என்னை இன்னணம் நண்ண என்னுதல்
கண்ணி யம்மென எண்ணி இன்னல்செய் வதுதீதே—
கண்ணே உன்மெயில் மின்னு வண்ணம
துன்ன அண்ணிளள் தண்மை அண்ணிலள்
கண்மை என்மகள் உண்மை பன்னிரு கணனே! கேள்;
வன்னி என்னமெய் பண்ணும் அன்னமுள்
உண்ண எண்ணிலள் உன்னை எண்ணமில்
மன்ன எண்ணுவள் பின்னை என்னென வினவாயேல்—

வண்ண முன்னினும் இன்மை துன்னிடும்
அன்னை என்மொழி கன்னம் வன்மைசெய்
வண்ண மென்னினு முன்னி முன்னனை தருவாயே;
பன்னி பன்மினி கொம்மை வெம்முலை
இம்மி என்னிடை இன்மை நண்ணனை
பைம்மை மைம்முகில் கண்ணன் இன்னிய மருகோனே—
பண்ணெ டின்னிசை பண்ணு மன்னவர்
இன்னம் விண்ணவர் என்னில் பண்ணவர்
பன்மை மன்னவர் நன்மை பண்ணென அடிபேணிச்;
சென்னி யின்மிசை எம்ம தெம்மதென்
அண்ணல் பொன்னடி வண்ண! மஞ்ஞைய!
செம்மல் மின்னயில் வன்ன! சண்முக! கொடிசேவற்—
சின்னம் நன்னுகை மன்ன! முன்னவர்
தம்முன் அன்னவர் தம்மொ டன்மைகொள்
சென்னை மண்ணடி தன்னில் மன்னிய பெருமாளே. (1)

(பதவுரை.) கன்னி தன்நிலை - (என் மகள்) கன்னிப் பருவமானது, மன்னு பெண்மணி - நிலைபெறப் பெற்றுள்ள பெண், என்னை இன்னணம் - என்ன காரணம் இவ்வாறு, நண்ண எண்ணுதல் - அடைய நினைத்தல், கண்ணியம் என-பெருமையாக, எண்ணி இன்னல் செய்வது - கருதித் துன்பம் உண்டாக்குவது, தீதே - தீமையேயாகும். கண்ணை - தன்னுடைய கண்களை, உன்மெயில் - உன் திருமேனியின் மீது, மின்னு வண்ணமது உன்ன - மின்னல் மின்னுவதுபோல நினைக்கும்படியாக, அண்ணினள் - நெருங்கிச் செலுத்தினள், தண்மை அண்ணிலள் - குளிர்ச்சி பொருந்தாதவளாயிருக்கின்றாள், கண்மை என் மகள் - மைக்கண் என்மகள் - மைபூசப்பெற்ற கண்ணையுடைய என்னுடைய பெண், உண்மை - இது முற்றிலும் உண்மைதான். பன்னிருகணனே - பன்னிரண்டு கண்களைக் கொண்ட முருகவேளே! கேள்-நீ கேட்பாயாக! வன்னி என்ன மெய்பண்ணும் - உடம்பானது நெருப்புப்போலச் சுடும்; அன்னம் உள் உண்ண எண்ணிலள் - அன்னத்தை உட்கொள்ள நினைக்கமாட்டாள். உன்னை எண்ணமில் - உன்னை எண்ணத்துக்குள்ளே, மன்ன எண்ணுவள் - நிலையாக நினைப்பாள். பின்னை - பிறகு, என் என வினவாயேல் - என்னவென்று கூட நீ கேட்காவிட்டால், வண்ணம் - நிறம், ஒளி, படிவம் முதலியன, முன்னினும் - முன்னைவிட, இன்மை துன்னிடும் - இல்லாமையைப் பொருந்தும். அன்னை என்மொழி - தாயாகிய என் சொற்கள், கன்னம் - (உன்னுடைய) காதுகளுக்கு, வன்மைசெய் வண்ணம்

என்னினும் - கொடுமை செய்யும்படி யிருந்தாலும், முன்னி - (தீர) ஆராய்ந்து, முன் - முன்பாக வந்து, அணை தருவாயே-(என் மகளை) அணைந்துகொள்வாயாக! பன்னி - பத்தினியாகிய, பன்மினி - பத்மினியாகிய இலக்குமி, கொம்மை வெம்முலை - விரும்பத்தக்க திரண்ட இளமுலைகளையுடையவள், இம்மி - மிகச் சிறியதாக - 'இம்மி'யளவாக, எண் இடை - எண்ணப்படுகின்ற இடுப்பானது, இன்மை நண்ண - (மேலும்) இராது போவதுபோற் காணப்படும் படியாக, அணை - (கட்டி) அணைகின்ற, பைம்மை - பசிய நிறமும், மைம்முகில் - கறுத்த மேகம்போல் நிறமுங்கொண்ட திரு மேனியையுடையவன் ஆகிய, கண்ணன் - கண்ணபிரானுக்கு, இன்னிய - இனிய, மருகோனே - மருமகனே! பண்ணொடு - பண்முறைகளோடு, இன்னிசை பண்ணும் - இனிய இசையைப் பாடும், மண்ணவர் - நன்மக்கள், இன்னம் விண்ணவர் - மேலும் விண்ணிலுறை வானவர்கள், எண்ணில் பண்ணவர் - அளவற்ற முனிவர்கள், பன்மை மன்னவர்-பற்பல அரசர்கள் யாவரும், நன்மை பண்ணு என - நலம் செய்வாயாக என, அடிபேணி - திருவடிகளை விரும்பி வைத்துக்கொண்டு, சென்னியின் மிசை - திருமுடியின் மீது, எம்மது எம்மது என் - (திருவடிகள்) எங்களுடையது, எங்க ளுடையது என்று சொல்லிக் கொண்டாடுகின்ற, அண்ணல் - பெருமை மிக்க, பொன் அடி வண்ண - பொன் போன்ற திருவடி அழகு படைத்தவனே! மஞ்ஞைய - மயில்வாகனனே! செம்மல் மின் அயில் - சிவந்த, மின்னல் போன்ற வேலாயுதத்தையுடைய, வன்ன - அழகனே! சண்முக - ஆறுமுகக் கடவுளே! கொடி - கொடியாகிய, சேவற் சின்னம் - சேவல் அடையாளம், நண்ணு கை - பொருந்திய கையையுடைய, மன்ன - அரசனே! முன்னவர்- யாவர்க்கும் மூத்தவர், தம்முன் - தமையனார், அன்னவர் தம்மொடு- அப்படிப்பட்டவராகிய விநாயகரோடு, அண்மைகொள் - அருகில் வீற்றிருக்கின்ற, சென்னை-சென்னைமாநகரில், மண்ணடி தன்னில் மன்னிய - மண்ணடியில் நிலைபெற்று விளங்குகின்ற, பெருமாளே- பெருமைக்குரியவனே!

(என் மகளை அணைந்துகொள்வாயாக என்றபடி)

பிலகரி] (6) முக்திசேர் வாக்கைப் பெற [ஆதி

தத்தன தாத்த தத்தன தாத்த
தத்தன தாத்தத் தனதான

கத்தனே! காட்டில் உற்றமான் வேட்டை
கற்றவா! கோட்டுக் குறமானைக்—
கட்டியாள் வேட்டு வக்குகா! வாய்ச்சொல்
கட்டிபோ லாக்கித் தருவாயே;

சித்தனே! பாட்டில் அத்தனே! வேட்கை
சித்தவி டாட்சிச் செயலாலே—
செத்தைபோல் வேற்கு முத்திசேர் வாக்கு
செட்டிநீ யாய்ச்சொற் றருள்வாயே;
சுத்தனே! காட்சி அத்தனே! சாட்சி
சொற்றகோ மாற்குச் சுதனே! மெய்ச்—
சொக்கனே! ஆக்கை அக்கனே! வாழ்க்கை
துட்டகு ரார்க்குக் கெடுமாசெய்;
முத்தனே! பாச்சொல் பக்தர்பேர் கேட்ட
முட்டையே! பாட்டிற் குறைகூறும்—
முத்தமீழ் மேற்கொள் பித்தனே! தேட்டை
முத்தியாள் பேட்டைப் பெருமாளே. (2)

(கு-ரை.) கத்தனே-கர்த்தனே; தலைவனே. கோடு-(வள்ளி) மலை. கட்டி - வெல்லக்கட்டி. பாட்டில் அத்தனே (அர்த்தனே) - பாடல்களிற் பொருளாயமைந்துள்ளவனே! வேட்கை - விருப்பம். சித்தவீடு - மனோராஜ்யம். செத்தை - துரும்பு. போல்வேற்கு - போல்வேனாகிய எனக்கு. செட்டி - முருகவேள். காட்சி அத்தனே - நல்ல திருவோலக்கக் காட்சி தருகின்ற அப்பனே! சாட்சி சொற்ற கோமான் - சிவபெருமான்; மாமனா வந்து வழக்குரைத்த திருவிளையாடல் செய்தவன். ஆக்கை அக்கனே - உடம்பில் உருத்திராக்க மாலையணிந்தவனே! துட்ட சூரார்க்கு வாழ்க்கை கெடுமா என அந்வயிக்க. கெடுமா - கெடுமாறு. பாச்சொல் பக்தர் - பொய்யாமொழிப் புலவர். பேர்கேட்ட - (புலவராற்) பேர்கேட்கப்பட்ட (அல்லது) (புலவரது) பேரைக் கேட்ட. முட்டை - பொய்யாமொழிப் புலவர்முன் வேடனாய்ச் சென்ற முருகவேள் தம் பெயரை 'முட்டை' என்று சொல்லிக்கொண்டார். பாட்டில் குறைகூறும் - பொய்யாமொழிப் புலவரின் பாட்டிற் பொருட் குற்றமுளதென்று சொன்ன. முத்தமீழ் - முத்தமிழ். தமிழ் என்பது சந்தம் நோக்கித் தமீழ் என வந்தது. தேட்டை - உயர்ந்த.

தந்யாசி] (7) அகப்பொருள் [ஆதி

தன்ன தன்னன தான தானன தனதான

அன்னை சொன்ன பிதாவும் யாவையும் ஒருநீயே—
அண்ணல் நின்னருள் பேணு தூநெறி அருள்வாயே;
தன்னை முன்மற வாத நாயகி இதுநாளுந்—
றன்னை யுன்மற வாது நாடுவள் தயைகூர்வாய்;

புன்னை வன்னிகு ராம ராபுர சரசாலர்—
பொன்னி வண்மையில் நீடு சோழந ளெடுநாடா;
தென்னை சென்னியில் நீரை ஈதல வகையார்வாழ்-
சென்னை மண்ணடி மேவு தேவர்கள் பெருமாளே. (3)

(கு-ரை.) அன்னை சொன்ன பிதா-தாயார், தாயாரால் 'இவர் தான்' என்று காட்டப்பெற்ற தந்தை தன்னை முன் மறவாத - முன்பு தன்னை மறக்காமலிருந்த. புன்னை - புன்னாக மரம். வன்னி-வன்னிமரம். குரா - குராமரம். மரா - கடப்ப மரம். புரசு - புரச மரம். அரசு - அரச மரம். ஆல் - ஆலமரம். ஆர் - ஆத்தி மரம். பொன்னி - காவிரியாறு. வண்மை - வள்ளன்மை. சென்னியில் - தலையால். நீரை - இளநீரை. ஈதல் அ(வ்)வகையார் - கொடுத்த லாகிய அந்த வகையைச் சேர்ந்தவர்கள். ஈதல வகையார் - கொடுக்கும் தலமாகிய பூமியின் வகையைச் சேர்ந்தவர்கள்.

தேஷ்] (8) தன்னை நிந்தித்தல் [ஆதி

தய்ய தனதனத் தனதான
தன்னன தன்னனத் தனதான

கல்வி கலாதுனைக் கவிபாடும்—
கண்ணியர் புண்ணியர்க் கருள்வோனே;
பல்வித மாயையிற் படுவேனும்—
பண்ணிய தெண்ணிடிற் றரமாமோ;
கல்வ மதாணிபெற் ருெளிர்வோனே—
கன்னியர் பன்னியர்க் கினியோனே;
செல்வ விநாயகர்க் கிளையோனே—
சென்னையில்-மண்ணடிப் பெருமாளே. (4)

(கு-ரை.) பண்ணியது-இதுவரையும் செய்துள்ள புண்ணிய பாவங்கள். தரம் ஆமோ - தகுதியோ! கல்வ மதாணி - நீலோற்பல மலர்களாற் செய்த பதக்கம் போன்ற அணி. பன்னியர்-பத்தினியர்.

பைரவி] (9) புகழ் கேட்டருளப்பெற [ரூபகம்

தன்னனத் தனதான

கண்ணினிற் கலிநாளிற்—கண்ணுறத் தெரிதேவே;
பண்ணினிற் கவிபாடும்—பன்னுவற் புகழ்கேளாய்;
விண்ணினிற் சசிகேள்வன்—மின்னளைத் திடுமார்பா;
மண்ணினிற் பெரியோனே—மண்ணடிப் பெருமாளே. (5)

(கு - ரை.) கலிநாள்-கலியுகம். பன்னுவல்-பனுவல்; பாட்டு. விண்ணினில் - விண்ணுலகத்தில். சசி - இந்திராணி. கேள்வன்-தேவேந்திரன். மின் - தேவசேனை.

குந்தலவராளி] (10) குருவருள் கண்டு களிக்க [ஆதி

தனதனனத் தந்ததான

கருவிருளைக் கொன்றுபோய்மெய்க்-
கனதனம்வைத் தன்புகூரும்;
குருவருளைக் கண்டுநாயேன்—
குதுகுலமுற் றின்புறேனே;
ஒருகுருளைக் கந்தனே!என்—
றுமைதழுவிக் கொஞ்சும்வாழ்வே;
திருவருளைத் தந்துபேணும்—
சென்னைமணடித் தம்பிரானே. (6)

(கு - ரை.) மெய்க் கனதனம் - உண்மைப் பெருஞ்செல்வம். குதுகுலம் - ஸந்தோஷம். குருளை - இளமைப் பருவமுடையவன். சென்னை மணடி - சென்னை மணணடி. (இடைக் குறைகள்)

சரவணபவகுருபரன் பதிகம்

(11)

கேதாரகௌளம்] (எழுசீரடி ஆசிரிய விருத்தம்) [ஆதி

சந்ததம் உனது திருப்புகழ் பாடிச்
சட்டி விசாகமொ டாரல்
வந்தனை பேணும் விரதநோற் பாரை
வரங்கொடுத் தாள்கரு ணையனே!
செந்தமிழ் பரவும் சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தந்தனை உன்னைக் கொண்டனை என்னைச்
சரவண பவகுரு பரனே. (1)

(கு - ரை.) ஆரல் - கிருத்திகை. தந்தனை...என்னை "தந்த தன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்"—திருவாசகம்.

(12)

ஆலய ந் தொழுதல் சாலவும் நன்றென்
றவ்வைப்பி ராட்டியார் அறைந்தார்
மாலய முறவே மலரடி தொழுநன்
மார்க்கமெற் குரைத்தருள் புரிவாய்!
சீலர்வ ந் திறைஞ்சும் சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
சாலவும் அழகா! தனியிளங் குழகா!
சரவண பவகுரு பரனே. (2)

(கு - ரை.) ஆலயம்...நன்று: "ஆலயந் தொழுவது சாலவும் நன்று"—ஔவையார்—கொன்றைவேந்தன். மாலயம் உற - மகாலயம் உற - பேரமைதியாகிற ஐக்கியம் பெற.

(13)

மனையொடு மக்கள் மாடெனு மிவற்றுள்
மாயையால் அழிந்திடா தருளாய்!
உனையுனும் உணர்வே எப்பொழு தும்மெற்
குறவருள் புரிந்திட நினையாய்!
சினைவளர் பொழில்சூழ் சென்னையில் மணடிச்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தனைமறந் தவர்தாம் தினந்தொழு தேத்தும்
சரவண பவகுரு பரனே. (3)

(கு - ரை.) மாடு - செல்வம். உனும் - உன்னும் - நினைக்கும். சினை - மூங்கில்; மரக்கிளை.

(14)

ஆனந்தம் என்னும் அருங்கடல் வாய்ப்பட்
டம்மையே! அப்பவென் றலறி
நானந்தம் எய்த நீநினைந் தருளாய்!
நால்வர்செல் வழியெனக் களியாய்!
தேனந்த மன்னுஞ் சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தானந்த மில்லாத் தத்துவ வடிவே!
சரவண பவகுரு பரனே. (4)

(கு - ரை.) நான் அந்தம் எய்த - நான் முடிவடைய. நால்வர் - சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகராகிய நால்வர். தேன் - வண்டு. நந்த - விளங்க. தான் அந்தமில்லா - தனக்கழி வில்லாத.

(15)

கொள்ளிவாய்ப் பட்ட எறும்பதை யொத்துக்
குவலயத் திடையழி கின்றேன்
வள்ளி மணாளா! குஞ்சரி நாதா!
எனவுனை வாழ்த்துதற் கறியேன்
தெள்ளிய அருள்செய்! சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தள்ளிட லாமோ! இந்தவிண் ணப்பம்;
சரவண பவகுரு பரனே. (5)

(கு - ரை.) கொள்ளிவாய்ப் பட்ட எறும்பு - "கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும்"—கந்தரலங்காரம்; "இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து"—திருவாசகம்; நீத்தல் விண்ணப்பம். குஞ்சரி - தெய்வயானை. தெள்ளிய - தெளிந்த. இந்த விண்ணப்பம் தள்ளிடலாமோ என அந்வயிக்க.

(16)

வாயிலா ஊமை கனநிகழ்ச் சியினை
வாய்திறந் தெங்ஙனம் சொல்லும்?
தாயிலாச் சேய்போல் தவிக்குமென் துன்பம்
சாற்றுறு தவையனு பவநீ
சேயிலாத் தாயோ! சென்னையில் மணடிச்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தாயிலா அணைந்தேன் நின்னடி எனையாள்
சரவண பவகுரு பரனே. (6)

(கு - ரை.) வாயிலா ஊமை கனநிகழ்ச்சி - ஊமை கனக் கண்டால் ஒன்றையும் வெளிச் சொல்ல இயலாது தவிக்குமாப் போலே என்க. "ஊமனர் தங்கன ஆக்கினர்" —சம்பந்தர். சேயிலாத் தாயோ - நீ பிள்ளைபெறாத தாயோ! நின்னடி தாயிலா அணைந்தேன் என அந்வயிக்க. தாயில் - தாய் வீடு (பிறந்தகம்).

(17)

கரும்பிருக் கவுமற் றிரும்பினைக் கடிக்கும்
கயவர்கூட் டத்தினிற் சேர்வேன்
அரும்பெடுத் தொருநாள் அடியிட உணரேன்
ஆயினும் எனைவலிந் தாள்வாய் !
திரும்பிடம் இல்லாச் சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய் !
தரும்படி அருளை வரும்படி கேட்டேன்
சரவண பவகுரு பரனே. (7)

(கு - ரை.) கரும்பு இருக்கவும் இரும்பினைக் கடிக்கும்-கரும்பு இருக்கும்போது அதை விட்டுவிட்டு இரும்பைக் கடித்துக் கடித்து வாய் அலுக்கும்: "கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்த வாறே" —அப்பர். ("மறுத்தாளுனார்") அரும்பு - மலருந்தறுவாயிலுள்ள பூ;இதில் தேனோ மணமோ சிதைந்திராது. அதனாற்றான் "மொட்டறு மலர் பறித்திறைஞ்சி" என்றார் மணிவாசகரும். வலிந்து - வலிய வந்து. திரும்பிடம் இல்லாச் சென்னை மண்ணடி-திரும்புவதற்குக்கூட இடமில்லாமற்படிக்கு நெருக்கமாயிருக்கின்ற சென்னை மண்ணடிப் பகுதி. தரும்படி-கொடுக்கும்படியாக. வரும்படி - (அருளாகிய) வருவாயை.

(18)

கனியிருந் திடவும் காய்கடித் தலுக்கும்
கடையரிற் கடையனும் நாயேன்
இனியுன தபயம் புகுந்தனன் எனிலஃ
திறைநினக் கதிசய மாமோ !
சனிகுனி அடியார் சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தனியிணை உறழ்ச்சி ஒருவரும் இல்லாச்
சரவண பவகுரு பரனே. (8)

(கு - ரை.) கனியிருந்திடவும் காய்கடித் தலுக்கும் - "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"—திருக்குறள் ; "கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே"—அப்பர். ("மெய்யெலாம்") இனியுன தபயம்: "இனியுன தபயம் அடிமையுன் அடிமை"—திருப்புகழ். சனி - சென்னி ; தலை. அடியார் சனி குனி சென்னை மண்ணடி என அந்வயிக்க. தனி - வேறுபட்டவர். இணை - ஒப்பானவர். உறழ்ச்சி - தன்னைவிட உயர்ந்தவர்.

(19)

தீயிருந் திடவும் மின்மினித் தீக்காய்
சிறியரிற் புலையனுஞ் சிறியேன்
வாயிருந் திடவும் வாழ்த்துவ தறியேன்
மலரடி இறைஞ்சுதல் குறியேன்
சேயிருந் தெனஆள்! சென்னையில் மணடிச்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தாயிருந் தெனவும் தந்தையெ னவுமாம்
சரவண பவகுரு பரனே. (9)

(கு - ரை.) தீயிருந்திடவும் மின்மினித் தீக்காய் - நெருப்பிருக்கையிலே மின்மினிப் பூச்சியின் தீயில் குளிர்காய்கின்ற (அல்லது) பெருந்தீ கைக்குக் கிட்டியிருக்கவும் சிறிய மின்மினித் தீக்கு (ஆய்) ஆராய்ச்சி செய்து தேடிக்கொண்டு போகின்ற: "விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறே"—அப்பர். ("கதியொன்றும") வாயிருந்திடவும் வாழ்த்துவது - "வாழ்த்த வாயும்"—அப்பர். குறியேன் - குறிக்கொள்ளமாட்டேன். சேயிருந்தென ஆள் - உனக்கு ஒரு பிள்ளை யிருக்குமானால் அதுபோல என்னை யொரு பிள்ளையாகக் கருதி எனை ஆட்கொள்வாயாக. தாய் இருந் தெனவும் தந்தை எனவும் ஆம் - எனக்குத் தாய் தந்தையர் போல ஆகும்.

(20)

நஞ்சதோர் பழம்போல் நஞ்சதை உண்ணும்
நாயன பேயரிற் கடையேன்
துஞ்சலும் பிறக்கும் தொழிலதும் கொண்டே
சோம்பலே யோம்பிவாழ்ந் திடுவேன்
செஞ்சரண் கொடுத்தாள்! சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தஞ்சமென் றடைந்தேன் சரணுன சரணே
சரவண பவகுரு பரனே. (10)

(கு - ரை.) நஞ்சதோர் பழம்-நைந்துபோன கனி; அதாவது உண்ணுதற்கு ஏற்ற பக்குவம் வாய்ந்த பழம். நஞ்சு - விஷம். துஞ்சல் - இறத்தல். ஓம்பி - போற்றிக் காப்பாற்றி செஞ்சரண்- செவ்விய திருவடி. சரண் - அடைக்கலம். உனசரண் - உன் திருவடி.

(21)

பாலினை விட்டுக் கள்ளியின் பாலைப்
பருகிடும் பாவியிற் பாவி
வேலினை ஓதேன் சேவலை நினையேன்
விரிசிறை மயிலினை உணரேன்
சேலினிள் கண்பார்! சென்னைமண் ணடியிற்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
தாலினை உனக்கே சமர்ப்பணம் செய்தேன்
சரவண பவகுரு பரனே. (11)

(கு - ரை.) பாலினை - பசும்பாலை. கள்ளியின் பால் - கள்ளிச் செடியினின்று சொட்டும் பால். சிறை - சிறகு. சேலின் நீள்கண் - சேல்மீனைவிட நீண்ட கண். தாலினை - (எனது) நாக்கை. சமர்ப் பணம் - அர்ப்பணம்.

(22)

எந்தநன் னாளும் திருவிழாப் போல
இனிதடி யவர்குழு குழுமும்
இந்தநற் கோயில் என்றென்றும் அருளால்
ஏழுல கிசைத்திடக் குடிவாழ்
சிந்தனைத் தளியாய்! சென்னையில் மணடிச்
செல்வ விநாயகர்க் கிளையாய்!
சந்தநற் பாக்கள் கேட்டக மகிழும்
சரவண பவகுரு பரனே. (12)

(கு - ரை.) எந்த ... கோயில் - மண்ணடிப் பிள்ளையார் கோயிலில் எப்போதும் திருவிழாப்போலக் கூட்டங் கூடுவது இன்றைக்குங் கண்கூடு. சிந்தனைத் தளி - மனக்கோயில். சந்தநற் பாக்கள் - நல்ல திருப்புகழ் முதலிய சந்தப் பாடல்கள்.

(செல்வ விநாயகர் கோயில் அருட்புகழ் முற்றும்)